செய்தி வெளியீடு எண்: 34 நாள்: 10.1.2010

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>இந்த ஆண்டில் 70 இலட்சம் குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கும் திட்டம்!</u>

## <u>குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து வழங்கித் திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்!</u>

போலியோ நோயை முற்றிலும் ஒழிப்பதற்காகத் தமிழகம் முழுவதும் "பல்ஸ் போலியோ" சொட்டு மருந்து முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதனால், அண்மையில் சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் போலியோ நோய் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், சில வட மாநிலங்களில் குழந்தைகள் போலியோவினால் பாதிக்கப்பட்டுள்ளதை யடுத்து, அந்த மாநிலங்களிலிருந்து போலியோ நோய்க் கிருமிகள் தமிழகத்திற்குப் பரவக் கூடும் என்பதால், போலியோ தடுப்புச் சொட்டு மருந்து முகாம்களை இந்த ஆண்டிலும் மாநிலம் முழுவதும் நடத்திட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் 10–1–2010 மற்றும் 7–2–2010 ஆகிய இரண்டு நாட்களில் தமிழகம் முழுவதிலும் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், சுற்றுலா மையங்கள் முதலான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 40 ஆயிரத்து 399 சிறப்பு முகாம்கள் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசுத் துறைகள், ரோட்டரி சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் உதவியுடன், போலியோ சொட்டு மருந்து வழங்கும் இத்திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (10–1–2010) அவரது இல்லத்தில், குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கித் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, முதலமைச்சரின் மனைவி திருமதி தயாளு அம்மாள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் திரு. எஸ். விநாயகம், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு. இளங்கோ, மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் இயக்குநர் மரு. நந்தகோபால்சாமி, குழந்தைகள் நல இயக்குநர் டாக்டர் சாரதா சுரேஷ் மற்றும் ஸ்டார் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மருத்துவ இயக்குநர் மரு. எஸ். பிரகாஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

* * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.